### கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்!

# நாமக்கல்லில் சித்த மருத்துவக் கல்லூரி விரைவில் பயன்பாட்டிற்கு வரும்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

சென்னை, அக்.17-

முதலமைச்சர் அவர்களால் கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.13.10 கோடி மதிப்பீட்டில் மருத்துவக் கட்டமைப்புகள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்றும், முதலமைச்சர் அவர்களால் விரைவில் நாமக்கல் மாவட்டத்தில் சித்த மருத்துவக்கல்லூரி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் 15.10.2025 அன்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.

இது குறித்த விவரம் வருமாறு:-

**கோவில்பட்டி சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு**

தூத்துக்குடிமாவட்டம், கோவில்பட்டி தொகுதியில் உள்ள வானரமுட்டி கிராமம், கயத்தார் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. வானரமுட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இது முப்பது படுக்கை வசதிகள் கொண்ட கழுகுமலை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்த ஊராட்சியின் மக்கள் தொகை என்பது 5871 மட்டுமே. அவருக்கு நன்றாக தெரியும் ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைய வேண்டுமானால் 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். ஏற்கெனவே அந்த ஊராட்சியைப் பொறுத்தவரை 4 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றது.

உறுப்பினர் அவர்கள் அவர் சார்ந்து இருக்கின்ற தொகுதியில் மட்டுமே இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு கு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் வழிகாட்டுதலின்படி, எந்தக் கட்சி சார்ந்த உறுப்பினர் என்றெல்லாம் பாகுபாடு பார்க்காமல் இந்த துறையில் மட்டுமே இதுவரை நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தியிருக்கும் பட்டியலை போட்டால் நீண்ட நேரமாகும்.

அதிலும் குறிப்பாக அவருடைய தொகுதியில் ஊருணி தெருவில், ஸ்ரீராம் நகர் பகுதியில் இரண்டு நகர்புற நலவாழ்வு மையங்கள், இலுப்பையூரணி, அத்திகுளம், விஜயாபுரி, கழுகாசலபுரம், செட்டிகுறிச்சி, காமநாயக்கன் பட்டி, சிவஞானபுரம் ஆகிய 8 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், கீழ் ஏரல் மற்றும் கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடங்கள், அதேபோல கழுகுமலை, கடம்பூர் மற்றும் கயத்தாறு ஆகிய 3ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆயுஷ் நலவாழ்வு மையங்கள், கழுகுமலை மற்றும் கீழ்ஏரல் ஆகிய பகுதிகளில் 2 ECG கருவிகள், அது மட்டுமல்ல முதலமைச்சர் அவர்களே நேரிடையாக வருகை புரிந்து கோவில்பட்டி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில், RTPCR ஆய்வகம் மற்றும்மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவ கட்டிடம், கண் அறுவை சிகிச்சை பிரிவு, கட்டண படுக்கை அறைகள், மாவட்ட ஒருங்கிணைந்த சுகாதார ஆய்வக கட்டிடம் என்று ரூ.13.10 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு எல்லாம்பயன்பாட்டில் வந்துள்ளன என்று தெரிவித்து, ஏற்கெனவே நான் அடிக்கடி சொல்வதைபோல ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடம் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அனுமதி கேட்டிருக்கிறோம், அனுமதி கிடைத்தவுடன் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சி கல்லூரிகள், செவிலியர் பயிற்சி பள்ளிகள் புதிதாக தொடங்குவதற்கு ஏற்கெனவே ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்டு கடிதம் வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதி கிடைக்கும் பட்சத்தில் நிச்சயமாக அவர்கேட்கும் இடத்தில் செவிலியர் பயிற்சி பள்ளியோ அல்லது செவிலியர் கல்லூரியோ அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு**

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவமனை என்பது ஏற்கெனவே அமையப் பெற்றுள்ளது. அவர் சொன்னது போல வட்டார அரசு மருத்துவமனை என்பது ஒரு சித்த மருத்துவக்கல்லூரி அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பணியாளர்கள் நியமனம் கூட தற்போது நடைபெற்று வருகிறது. மிக விரைவில் ட முதலமைச்சர் அவர்கள் காணொளி வாயிலாக நாமக்கல் மாவட்டத்தில் ஒரு சித்த மருத்துவக் கல்லூரியை விரைவில் திறந்து வைக்க உள்ளார்கள். அந்த கட்டிடம் என்பது மருத்துவத்துறையின் செயல்பாட்டிற்கு வரவேற்கப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு**

மிக நீண்ட காலத்திற்கு பிறகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, கடந்த ஜீலை திங்கள் 03 ஆம் தேதி ஊரக மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 50 கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. மீண்டும் ஒன்றிய அரசின் அலுவலர்களுடன் தமிழ்நாட்டிற்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டும் என்று கேட்கும்போது அவர்கள் சொல்வது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்களும் என ஆக மொத்தம் 11,049 சுகாதார மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கின்றது.

வடமாநிலங்களில் இதில் பாதி கூட இல்லை. எனவே உங்களுக்கு காலம் தாழ்த்தி தருகிறோம் என்றெல்லாம் பதில் சொல்கிறார்கள், என்றாலும் முதலமைச்சர் அவர்களின் தேவைகள் குறித்த கடிதத்தை ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி கொடுத்திருக்கிறோம். வரும்போது நிச்சயம்விதிமுறைகளின்படி அமைய வேண்டுமோ அங்கேயெல்லாம் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**கந்தவர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு**

நான் ஏற்கெனவே சொன்னதுபோல 11,049 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் இது மட்டும் போதாது என்று சொல்லி ஏற்கெனவே 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் நிறுவி திறந்து வைத்திருக்கிறார்கள். இப்படி புதிய புதிய மருத்துவக் கட்டமைப்புகள் தொடர்ச்சியாக தொடங்கி கொண்டிருக்கும் சூழ்நிலையில் ஒன்றிய அரசின் அனுமதி கிடைத்தவுடன் எங்கெயெல்லாம்தேவைப்படுமோ அங்கெயெல்லாம் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு**

திருமுட்டம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பொறுத்த வரை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஏற்கெனவே சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனை என்று வரும்போது ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறைய வசதிகள் பறிபோகும் என்பதை மன்ற உறுப்பினர் அவர்களும் அறிவார். 2 வசதிகள் கூடுமானால் 8 வசதிகள் பறிபோகும் என்கின்ற வகையில் விதிமுறைகள் இருக்கின்றது. இப்போது இருக்கின்ற 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையே மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு**

இந்த அரசு அமையப் பெற்றதற்கு பிறகு முதலமைச்சர் அவர்கள் பொது சுகாதாரத்துறைக்கு மட்டும் ரூ.1,274.25 கோடி மதிப்பீட்டில் 1,500 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கூடுதல் கட்டிடம், துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டி தொடர்ச்சியாக திறந்து வைக்கப்பட்டு வருகிறது.

மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பது போல 600-க்கும் மேற்பட்ட துணை சுகாதார நிலையங்கள் மிக விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளது. அதில் ஒன்றை அவர் கேட்கும் இடத்தில் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### மதுரவாயல் தொகுதியில்

# அரியா கிரையம் பெற்றவர்களுக்கு பட்டா வழங்கிடுக!

## பேரவையில் – காரம்பாக்கம் க.கணபதி கேள்வி!

**சென்னை, அக்.17–**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது மதுரவாயல் தொகுதி உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பதிலும் வருமாறு:–**



**காரம்பாக்கம் க.கணபதி:** மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளில் குடியிருந்து வருகிற மக்களுக்கு, முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் 10,200 நபர்களுக்கும், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு, 13-ஆம் தேதி நடந்த பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் 1,600 நபர்களுக்கும், இதுவரை 14,800 நபர்களுக்கு வீட்டு வசதித் துறை சார்பிலே பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாக, முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இதயமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

மேலும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் மிக விரிவாக பதிலை அளித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே அரியா கிரையம் பெற்றவர்கள், மூன்று, நான்கு CAD REல் அரியா கிரையம் பெற்றவர்கள், அதுதான் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. மூன்றாண்டுகளில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலில், நம்முடைய அமைச்சர் அவர்கள் சிறந்த முன்னெடுப்புகளை எடுத்து வருகிறார்கள்.

இன்றைக்கு எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்களின் கேள்விக்கு தகுந்த பதிலை அளித்திருக்கிறார்கள். கேள்வியிலேயே பதில் இருக்கிறது என்று நான் எடுத்துக்கொள்கிறேன். ஆகவே, கூடிய விரைவில் பட்டா வழங்கும் நிகழ்ச்சியை, NOC வழங்கும் நிகழ்ச்சியை நிறைவேற்றி தருவாரா?

**அமைச்சர் சு. முத்துசாமி:** நான் ஏற்கெனவே சொன்னேன், முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு புகார் மனு வந்த உடனேயே, இதை பாரபட்சம் இல்லாமல் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டு, அந்த மனுக்கள் எல்லாம் பெறப்பட்டு, இதில் அரசு தனியாக, ஒரு துறை மட்டும் நடவடிக்கை எடுத்தால் அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்கலாம்; தவறுகள் பேசப்படலாம் என்கிற காரணத்தால், இரண்டு ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மூலமாக அது ஆய்வு செய்யப்படுகிறது.

அவர்கள் நவம்பர் மாத இறுதிக்குள்ளாக ஆய்வறிக்கையை கொடுப்பதற்கான ஒப்புதலை தந்திருக்கிறார்கள். அது பெறப்பட்ட உடனேயே, துறை அதற்கான ஆய்வை செய்து, இரண்டு மாத காலத்திற்குள்ளாக, அவை அத்தனையும் கொடுத்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு மாதமும் ஆய்வின்போது இதுகுறித்து கேட்கிறார்கள். என்ன நடந்திருக்கிறது என்பதை ஒவ்வொரு மாதமும் அவரிடத்திலே நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். எனவே, தெரியாமல் INNOCENT PURCHASE அவர்கள்தான் மிக முக்கியம் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு உண்டான பிரச்சினை தீர்க்கப்படும் என்பதை மட்டும் உத்தரவாதமாக இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### வட்டச் செயலாளர் கே.அங்குசாமி ஏற்பாட்டில்

# மாதவரம் 15வது வட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## புழல் எம். நாராயணன் ஆலோசனை வழங்கினார்!

மாதவரம், அக். 17-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 15-வது வட்ட நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள் கூட்டம் மணலி புதுநகர் 15வது வட்ட திமு கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

15-வது வட்டச் செயலாளர் கே.அங்குசாமி ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு, அவைத்தலைவர் இ. இராஜேந்திரன் தலைமை தாங்கினார். பாக ஒருங்கிணைப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

15-வது வட்டத்திற்குட்பட்ட பாகம் எண்கள் 230 முதல் 242 வரை உள்ள 13 பாகங்களிலும் உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து, வீடு வாரியாக குடும்பங்களின் பட்டியலை தயார் செய்து மாவட்ட கழகம் வழங்கியுள்ள நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. விடுபட்ட வாக்காளர்களை சேர்த்தல், நீக்கல், இடமாற்றம், இறந்தவர்கள் பற்றிய விவரங்கள், வெளியூர் சென்றவர்கள் பெயர்களை கண்டுபிடித்து வரும் வாக்காளர் சேர்த்தல் நீக்கல் சிறப்பு முகாமில் சிறப்பாக செயல்படுவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல்அரசில் பொதுமக்களுக்கு செய்துள்ள சாதனைகளை துண்டு பிரசுரங்களாக அச்சடித்து வீடு வீடாக சாதனைகளை எடுத்துச் சொல்லி வாக்கு சேகரிப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் முகமது வசீம், எஸ். கோபாலகிருஷ்ணன், இ. எம். மனோகரன், மாவட்ட பிரதிநிதி கே செல்வன்,வட்ட கழக நிர்வாகிகள் கே. கண்ணன், பி. டி. ரவிச்சந்திரன், ஏ. பக்தவச்சலம், இ. எல்லமுத்து, எஸ். பாலாஜி, எம் .முருகன், எல். தேவராஜ், வக்கீல் டில்லி பாபு, எஸ். தனசேகர், இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ. விஜயன், ஏ.தசரதன், புஷ்பராஜ், சந்தோஷ், குணசீலன், ரஞ்சித், கு. சீனிவாசன் இ. சீனிவாசன், ஸ்ரீராஜேஷ் குணசேகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




மாண்புமிகு. மா.சுப்பிரமணியன் B.A.,LLB

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்

அவர்களின் இளைய மகன்

சு.அன்பழகன்

6 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

நாள் : 17.10.2025 வெள்ளிக்கிழமை

அன்பின் நினைவுகள் அழியாது – அது
ஆகாயம் உள்ளவரை அகலாது

என்றும் நன்றியுடன்

செங்கல்பட்டு அமெச்சூர் ஆணழகன் சங்கம்
& கோல்டு ஜிம் நண்பர்கள்


### நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – அன்பகம் கலை – எழிலன் நாகநாதன் – சைதை சாதிக் பங்கேற்பு:

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வட்ட செயலாளர்கள் - பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, அக்.17-

ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப் படி துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர், பாக ஒருங்கிணைப்பாளர்கள், வழக்கறிஞர் அணி பாக பொறுப்பாளர்கள், பாகத் தலைவர்கள் (பி.எல்.ஏ2) ஆலோசனை கூட்டம் நாளை (18.10.2025) காலை 10 மணிக்கு, சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சி பகுதி அவைத் தலைவர் எம்.ஆர். ஜம்புலிங்கம் தலைமையில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், தொகுதி பார்வையாளர் சைதை சாதிக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றுகிறது

இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் பாக ஒருங்கிணைப்பாளர்கள் வழக்கறிஞர் அணி பாக பொறுப்பாளர்கள் பாக தலைவர் (பி.எல்.ஏ2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

அதுபோது, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி 4,வது மண்டலத்திற்கு உட்பட்ட 56,வது வார்டு காமராஜர் நெடுஞ்சாலையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் கல்வி நிதியிலிருந்து புதிய கட்டிடத்திற்கு 2:50 லட்சத்தில் முதல்வர் படிப்பகத்திற்கான கட்டிடம் கட்டும் பணியை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டினார் உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி,மண்டல தலைவர்பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ் தெற்கு பகுதி செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான எஸ்.சேகர்,பி.புகழேந்தி வட்ட செயலாளர்.சுரேஷ், பகுதி நிர்வாகிகள் மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் அவை.தங்கதுரை மற்றும் நல சங்க நிர்வாகிகள், பெருமக்கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 அண்ணா சாலையில் நடைபெற்று வரும் சாலை பணிகளையும் இதர பணிகளையும், தெரு மின்விளக்குகளையும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி ஆய்வு செய்தார். இவ்வாய்வுப் பணியில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன்,அந்தந்த பணிகளின் ஒப்பந்தாரர்களும் உடன் இருந்தனர்.